**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – சமூகப் பாதுகாப்பு – சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தில் ஓட்டுநராக பணிபுரிந்த திரு.மு.கன்னியப்பன் என்பவர் 04.02.2007 அன்று பணியிடை மரணமடைந்தது – அன்னாரின் வாரிசுதாரர் திருமதி.க.மஞ்சுளா என்பவரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – உரிய விதிகளை தளர்வு செய்து தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 10.12.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் [சந8(2)] துறை**

அரசாணை (3ப) எண். 8

நாள் 22.06.2023
சோபகிருது, ஆனி 7,
திருவள்ளுவர் ஆண்டு 2054

**படிக்க:–**

1. அரசாணை (நிலை)எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு(க்யூ1)த் துறை, நாள் 23.01.2020
2. சமூகப் பாதுகாப்பு இயக்குநரின் கடித எண்.12366/ அ2/2021, நாள் 02.06.2022, 10.09.2022 மற்றும் 03.03.2023

*****

**ஆணை:–**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு இயக்குநரின் கடிதத்தில், சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தில் ஓட்டுநராக பணிபுரிந்த திரு.மு.கன்னியப்பன் என்பவர் 04.02.2007 அன்று பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அன்னாரின் வாரிசுதாரர் திருமதி.க.மஞ்சுளா என்பவரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து தனியர் திருமதி.க.மஞ்சுளா என்பவர் 10.12.2020 முற்பகல் முதல் செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேற்காண் தனியர் திருமதி.க.மஞ்சுளா என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 10.12.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசை வேண்டியுள்ளார்.

2. சமூகப் பாதுகாப்பு இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசானது, சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தில் ஓட்டுநராக பணிபுரிந்த திரு.மு.கன்னியப்பன் என்பவர் 04.02.2007 அன்று பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட அன்னாரின் வாரிசுதாரர் திருமதி.க.மஞ்சுளா என்பவருக்கு பணிநியமனத்திற்கு

Scanned by TapScanner

முன் திருமணமாகி உள்ளதால், மேற்காண் தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், பிரிவு 58-ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15-னை தளர்வு செய்வதுடன், தனியர் பணப்பலன்கள் பெற ஏதுவாக மேற்காண் சட்டப் பிரிவு 28(2)-னை தளர்வு செய்து, மேற்காண் தனியர் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 10.12.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுகிறது.

3. இவ்வரசாணையானது, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண்.4399/ட்டி1/2023, நாள் 19.06.2023ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுன்சோங்கம் ஜடக் சிரு
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சமூகப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை – 10
திருமதி.க.மஞ்சுளா, இளநிலை உதவியாளர்,
(சமூகப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை–10 வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை –18
சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை–1
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்
(சமூகப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை–10 வழியாக)

<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்
துறை அவர்களின் முதன்மைத் தனிச் செயலாளர், சென்னை–9
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, சென்னை–9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9
இருப்பிடத் தணிக்கை அலுவலர்,
மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பி.மனோகரி
பிரிவு அலுவலர்.
22.06.2023

Scanned by TapScanner